International Journal for Development of Science and Technology (IJDST)
Vol. 1, Issue, 16, March 2021 PP.01-14
www.ijdst.com
ISSN: 2456-8503

# வண்ணதாசன் சிறுகதைகளில் சமுதாயப் பார்வை - ஓர் ஆய்வு

மு. நஞ்சம்மால், ஆராய்ச்சி அறிஞர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்
முனைவர் ஏ.கண்ணகி, உதவி பேராசிரியர் தமிழ் துறை, எம்.ஏ.ஆர் கிரிகோரியஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மொகாபெய்ர் மேற்கு. சென்னை

**முன்னுரை**

இன்றைய சமுதாய மாற்றத்திற்கு இக்காலத் தமிழ் இலக்கியப் படைப்புகள் பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே, நவீன இலக்கிய வகைமைகளுள் ஒன்றான சிறுகதை இலக்கியத்தை ஆயும் வழி பல்வேறு சமுதாயத் தீர்வுகளைப் பெற முடியும். வண்ணதாசனின் 'முத்துக்கள் பத்து' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் பத்து சிறுகதைகளை ஆய்வு எல்லையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது. மனிதனின் அன்றாட நிகழ்வுகளைப் பல கோணங்களில் இச்சிறுகதைத் தொகுப்பு எடுத்துரைக்கிறது. தனி மனிதனின் ஒழுக்கமுறை, வறுமை நிலை, கல்வியின்மை போன்ற சமூகச் சிந்தனைகளை ஆய்வு செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். சமுதாயத்தில் நிகழும் சம்பவங்களைச் சித்தரிக்கும் வகையில் இச்சிறுகதைத் தொகுப்பு அமைகிறது. வண்ணதாசன் எழுதிய 'முத்துக்கள் பத்து' என்ற சிறுகதைத் தொகுப்பை முதன்மை ஆதாரமாகவும், மற்றும் பல்வேறு திறனாய்வு நூல்களைத் துணைமைச் சான்றுகளாகவும் கொண்டு இத்திட்டக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## சிறுகதையின் தோற்றமும், வளர்ச்சியும்

**முன்னுரை**

மனித வாழ்வின் நிகழ்வுகளை குறுகிய நேரத்தில் மக்களுக்குத் தெளிவாக உணர்த்துவது சிறுகதையாகும். சிறுகதைகள் பல கோணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. சிறுகதை மக்களின் மனதினை மாற்றும் கருவியாக விளங்குகிறது. அத்தகைய சிறுகதையின் தோற்றமும், வளர்ச்சியும் இவ்வியலில் ஆராயப்படவுள்ளது. இன்றைய இலக்கிய உலகில் சிறுகதை சிறப்பிடம் பெற்றுத் திகழும் இலக்கிய வடிவமாகும். தற்போது விஞ்ஞான வளர்ச்சியும், பொறியியல் வளர்ச்சியும் மிக முன்னேற்றமடைந்துள்ளன. அதனால் மன அமைதியுடன் ஓரிடத்தில் அமர்ந்து நீண்ட நேரம் ஒரு கதையைப் படிப்பதற்கு மக்களுக்கு விருப்பமில்லாமையும், விரைவில் படித்தறிந்து கொள்ள வேண்டுமென்ற மக்களின் விருப்பமுமே சிறுகதை தோன்றக் காரணம் ஆகும். சிறுகதை என்பது வாழ்க்கையின் சாளரம் என்றும், ஒரு சாவித் துளையின் வாயிலாகப் பரந்த ஓர் அறையைப் பார்ப்பது போன்றது என்றும், ஒரு மின்னல் வெட்டு போன்றது என்றும், ஒரு நூறு மீடடர் ஓட்டத்தை ஒத்தது என்றும் சிறுகதை பல கோணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்று சிறுகதைக்குக் கூறும் விளக்கம் ஆகும்.

ஒரு சிறுகதையின் ஏதேனும் ஒரு இடத்தில் துப்பாக்கி மாட்டி இருக்கும் என்றால் அது ஒரு இடத்தில் வெடித்தே ஆக வேண்டும். இங்குச் சிறுகதையின் இலக்கணத்தைச் சுருங்கக் காண்போம். சிறுகதையானது சுவையான நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு கவர்ச்சியான ஒரு காட்சி நெருங்கி பின்னப்பட்ட ஒருவரின் தனிப்பண்பு, ஒரு சிறு அனுபவம், வாழ்க்கையின் ஒரு வெற்றி, அறவுணர்வால் விளைந்த ஒரு சிக்கல் இவற்றில் ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம். சிறுகதை என்பது முன்கூட்டியே யோசித்து சிந்தித்துப் பார்த்து எழுதப்படும் படைப்பு அல்ல. ஒரு படைப்பாளியின் உணர்ச்சிப் பூர்வமான வெளிப்பாடுதான் சிறுகதை. அவனுடைய உணர்ச்சிகள், பாவங்கள் தான் அவனுடைய படைப்பில், கதையின் நோக்கத்தை, அவனுடைய இலட்சியத்தை நிர்ணயம் செய்கிறது என்கிறார்

அறிஞர் பஷ்மசகானி. மேலைநாட்டு அறிஞர் செட்ஜவிக், ஒரு சிறுகதையானது குதிரை பந்தயம் போல் தொடக்கமும் முடிவும் இருக்க வேண்டும் என்பார். மேலும் சிறுகதைகளில் நீண்ட வருணனைகளுக்கு இடமில்லை. கதை மாந்தரின் பண்பை விளக்கவதற்கோ கலை நிகழ்ச்சியை புலப்படுத்துவதற்கோ ஏற்ற அளவிற்கு உரையாடல் அமையலாம் என்கிறார். மு.வரதராசனார் சிறந்த சிறுகதையின் அமைப்பே சிறுகதையின் இலக்கணம் என்ற கூற்று இங்கு நோக்கத்தக்கதாகும்.

சிறுகதை என்பது மக்களிடம் காணப்படக்கூடிய சமுதாய நிகழ்வுகளை விளக்குவதாகும். அறியாமை நம்பிக்கைகள் ஆண், பெண் உறவு முறைகள், மொழிகள் வாழ்கை முறைகள் படிக்க வடிக்கம் என்பவற்றில் ஏதேனும் ஒன்றை கதைகருவாக கொள்வது. சிறந்த பாத்திரங்களை படைத்து நடந்த நிகழ்வுகளை கற்பனை கலந்து உணர்ச்சிபூர்வமாகப் படைக்கப்படும். “சிறுகதை என்பது தொடர்ச்சியான கதை வரலாறு உண்மையல்லாதது. ஆனால் உண்மை போன்றே தோன்றுவது இயலுக்கின்ற தேர்ந்த தொடர்நிகழ்வுகளை உணர்ச்சிபூர்வமாக வார்த்தைகளால் பின்னப்பட்டு அமைத்து, மகிழ்வித்தலை நோக்கமாகக் கொண்டது என்று கூறுவது இங்கு குறிப்பிடதக்கது”[1] சிறுகதை அன்றாட வாழ்வில் காணப்படும் நிகழ்ச்சிகளையும் மனிதர்களையும் அழப்படையாக கொண்டு அவற்றிக்கு உயிரும், உணர்ச்சியும் ஊட்டிக் கற்ப்பனையறுப் புனையப்படும் எனத் தெரிகிறது. சிறுகதை இலக்கியம் ஒரு நெடிய கதை போக்கினைக் கொண்டது அதனால் காப்பியங்களோடு புதினங்களையும் ஒப்பிட்டுக் காண்பர். செய்யுள் வடிவில் இருந்த இலக்கியம் காலப்போக்கில் உரைநடைவடிவமாக மாறியது குறிப்பிடதக்கது. படைப்பாளிகள் தக்கள் மனதில் தோன்றிய சமுக சிக்கல்களை கருவாகக் கொண்டு மக்கள் மனதில் விழிப்புனர்வை ஏற்படுத்த பயன்படுத்தினர் எனவே காலத்தை வென்ற இலக்கிய வகையாக இன்று சிறுகதைகளாக திகழ்கின்றன. தமிழிலக்கியத்தை பொருத்தவரையில் சிறுகதை நாவல் இரண்டையும் புனைகதைகள் என்று கூறுவர்.

**சிறுகதை குறித்த அறிஞர்களின் கருத்து**

சிறுகதைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் தங்களது கருத்துக்களைக் குறிப்பிடுகின்றனர். “சிறுகதையை அமெரிக்காவின் தேசிய கலைவடிவம் என்று வர்ணிக்கிறார் ∴பிராங்க் ஓ கார்னர், இவ்வர்ணனை அமெரிக்காவிற்கு மட்டுமல்ல எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்”[4] என்கிறார். “சிறுகதை என்பது அரைமணி நேரத்திலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள் படித்து முடித்துவிட முடிகின்ற அளவு அடைந்த இலக்கிய வடிவம்”[5] என்கிறார் எட்கர் ஆலன்போ. 1885 ஆம் ஆண்டு மாத்யூ என்பவர் “சிறுகதை என்பதற்கு ஒரு தனி அழுத்தம் தந்து. சிறிய கதைகளிலிருந்து சிறுகதையைப் பிரித்துக்காட்டி, சிறிய கதை என்று இரண்டு ஆங்கில சொற்களை ஒன்றாக இணைத்ததே சிறுகதை”[6] என்று கூறுகிறார். சிறுகதையை எர்னல்ட் ஹெமிங்வே, “கடலில் மிதக்கும் பனிப்பாறைகளுடன் ஒப்பிட்டு மிக அழகாக விளக்குகிறார். வெளியிலே புலப்படுகின்ற இந்தப் பனிப்பாறைகளின் பகுதிகளைவிட பலமடங்கு பகுதிகள் நீரில்தான் அமிழ்ந்திருக்கும்”[7] என்கிறார். “சிறுகதை ஒரு மாளிகையின் சாரளம் என்றால் மாளிகையின் மொத்த பரப்பும் ஆகும் என்று ஜியார்ஜீமூர்”[8]

**சிறுகதையின் வளர்ச்சி**

சிறுகதை வளர்ச்சிக்கு உதவியாக இருந்த சாதனம் பத்திரிகைகளாகும். பத்திரிக்கையில் வெளியிட புனைக்கதைகள் தேவைப்பட்டன. இலக்கிய நோக்கத்திற்கோ அல்லது இலக்கிய ஆர்வத்திற்கோ அல்லது வெறும் பொழுது போக்கிற்கோ கதைகள் வெளியிடப்பட்டன. இவற்றின் காரணமாக வெளியிடப்படும் பத்திரிக்கை ஓர் இதழுக்குள் அடங்கும் தேவை ஏற்பட்டது. இதனால் சிறுகதையில் அளவு குறைய வேண்டியதாயிற்று. குறுகிய அளவுள்ள பல சிறுகதைகள் வெளியிடப்பட்டன. தமிழ்நாட்டில் சிறுகதை பெருக்கத்திற்குக் காரணமாக இருக்கும் இதே நிலைதான் ஐரோப்பிய, அமெரிக்க இலக்கிய வரலாற்றிலும் சிறுகதைப் பெருக்கம் அக்காலத்தில்

ஏற்பட்டது. எனவே, ஒரு முறையில் வெளியிடப் போதுமான அளவுடைய கதைகள் பல எழுதப்பட்டன.

சிறுகதை வளர்ச்சி 1950 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தோன்றிய இலக்கிய விழிப்புணர்வு காரணமாக எழுத்தாளர்கள் இன்று தமிழ்ச் சிறுகதை உலகில் முக்கிய இடம் பெறுகிறார்கள். அவர்களுள் சமூக நோக்குடன் இலக்கிய பணியாற்றும் ஒருவரால் சிறுகதையில் ஏற்பட்ட வளர்ச்சியினைக் காணலாம். புதிய பரம்பரை என்னும் அத்தியாயத்தில் இக்காலப் பிரிவில் இலக்கிய தேக்கத்தை எதிர்த்து குரல் கொடுத்தவர்கள் எல்லாம் இருவேறு வழியாக சென்றார்கள். அவர்களின் கலைவழியில் சென்றவர்தான் சுந்தரராமசாமி ஆவார்.

“தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக்குச் சான்றாக விளங்கும் எழுத்தாளர்களில் ஒருவராக திகழ்பவர் ஆர்.சூடாமணி ஆவார்.”[9] இவர் உணர்ச்சி நிலைகளைச் சித்தரித்துக் காட்டுவதில் வல்லவர். இவருடைய கதைகள் யாவும் உணர்வு நிலை யதார்த்தபூர்வமான சம்பவத்தின் இயல்பாகவே தோன்றும். இதனால் இவருடைய சிறுகதைகள் வாசகரின் கவனத்தைக் கவர்ந்தன. தமிழ்ப் புனைக்கதை எழுத்தாளர்களில் தலைசிறந்த பெண் எழுத்தாளராகத் திகழ்பவர் இவரே ஆவார். இவர் பல்வேறு சமூக நிலைகளில் பழகும் பெண்களின் உணர்வுகளை எடுத்துக்கூறுவதில் வல்லவர். மணிக்கொடி எழுத்தாளராக விளங்கும் வல்லிக்கண்ணன் ஒவ்வொரு காலக்கட்டத்தில் சிறுகதை வளர்ந்து வரும் வளர்ச்சியினைக் கதைகளாக எழுதி வருகிறார்.

சிறுகதைகளின் இன்றைய நிலையில் ஆராயும்பொழுது சிறுகதையாசிரியர்கள் பெயர் பட்டியல் மேலோங்கி நிற்கிறது. ஆனால் ஒரு இலக்கிய வகையின் வளர்ச்சியைக் கணிக்கும்பொழுது அவ்விலக்கியத்தை வாகனமாக கொண்டவரின் தொகையைக் கணக்கிடுவது என்பது இயலாத ஒன்றாகும் என்றாலும் இலக்கிய வகையின் வளர்ச்சியையும் அதற்குக் காரணமாக இருப்பவர்களையும் கணக்கிடுதல் அவசியமாகும்.

**சிறுகதை வளர்ச்சிக்குத் துணை நின்ற இதழ்கள்**

சிறுகதைத் துறை வளர்ச்சிப் பெறுவதற்குப் பெரிதும் துணை நின்றவை இதழ்களாகும். 1920 ஆம் ஆண்டு அளவில் உருவான பல இதழ்கள் சிறுகதைகளைத் தொடர்ந்து வெளியிட்டிருக்கின்றன. டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் தமிழ்நாடு, திரு.வி.க.வின், தேசபக்தன், டி.எஸ்.சொக்கலிங்கத்தின், காந்தி, சங்கு, கணேசனின், சுதந்திரச் சங்கு போன்ற பல பத்திரிக்கைகள் வெளியிடப்பட்டுள்ள. இருப்பினும் சீனிவாசன் நடத்திய மணிக்கொடி எனும் இதழே சிறுகதையின் இலக்கியத் தரத்தை வளர்க்கவும், ஏராளமான சிறுகதை எழுத்தாளர்கள் உருவாகிச் சிறக்கவும் துணைபுரிந்து எனலாம்.

**இருபதாம் நூற்றாண்டின் சிறுகதை**

பக்தி காலம், காப்பிய காலம் என்பது போல இருபதாம் நூற்றாண்டினைச் சிறுகதைக் காலம் எனக் கணிப்பின் தவறன்று. அந்த அளவிற்குச் சிறுகதைகள் பெருகியுள்ளன. சிறுகதை இல்லையேல் வார இதழ்கள், மாத இதழ்கள் இல்லை எனும் நிலை உள்ளது. நூவல் எனும் பெருங்கதை நெடிய திருமால் எனின், சிறுகதை திருமாலினி வாமன் அவதாரம் எனலாம். சிறிய அளவில் பெரிய நிகழ்வுகளைத் தருதல். எனவே தான் சிறந்த சிறுகதை எழுதுவது என்பது நாவலைவிட கடினமானது என்பர்.

மேலைநாட்டுத் தொடர்பினால் இலக்கிய வகைகள் தமிழ்நாட்டில் கையாளப்பட்டன. பாரம்பரிய வழி வரும் கதைகளிலிருந்து வேறுபட்டவையே புனைக்கதைகள். இப்புனைக்கதைகளுள் ஒன்றுதான் சிறுகதை. ஒரு படைப்பாளியின் உணர்ச்சி பூர்வமான வெளிப்பாடு தான் சிறுகதை. சிறுகதைகளில் நீண்ட வருணனைகளுக்கு இடமில்லை. வாழ்க்கையின் ஒரு வெற்றி, அறவுணர்வால் விளைந்த ஒரு சிக்கல் இவற்றுள் ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்.

**கதைக்கருவும், கதைச்சுருக்கமும்**

ஒரு சிறுகதையின் நிலைத்த புகழுக்கு காரணம் அக்கதையின் மையக்கருவே ஆகும்.

அக்கருவின் வெளிப்பாடு அமைந்த நிலையே கதைச் சுருக்கமாகும். சிறுகதைத் தொகுப்பில் அமைந்துள்ள மையக் கருத்துக்கள் மிக நுட்பமாக அமைந்துள்ளன. சிறுகதையிலிருந்து வேறுபட்ட பல நிகழ்ச்சிகளையும் செயல்களையும் தன்னகத்தை கொண்டு கதை மாந்தரிகன் பண்புகளுக்கு ஏற்ப உரைநடை இலக்கிய வகையே சிறுகதையாகும். கதைகரு கதைப்பின்னல் ஆகியவை ஒன்றுக் கொண்று சங்கலித் தொடர் போல அமைந்தவை. கருவை மையமாகக் கொண்டு கதையும் கதையின் விளக்கமாகக் கதைப்பின்னலும் சொல்லும் கதைக்கரு வாழ்வின் எந்த ஒரு நிகழ்வையும் அடிப்படையாகக் கொண்டும் அமையாலாம். கதைக் கருவிற்குரிய அடிப்படையை ஆசிரியர் கூறுவதும் உண்டு. கூறாமல் சொல்வதும் உண்டு. கருவும் கதைப்பின்னலும் கதையை நடத்திச் செல்வதால் அவை இரண்டு இங்கு விளக்கப் படுகிறது.

**கதைக்கரு**

சிறுகதை தோன்றுவதற்க்கு அடிப்படையாக இருப்பது அதற்குரிய கருவாகும். மனிதன் எப்படி கருவில் இருந்து தோன்றுகிறானோ அதைபோலவே நாவலும் ஒரு கருவில் இருந்துதான் தோன்றுகிறது. ‘‘கதைக்கரு என்பது வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி, ஒரு சிக்கலான விளைவு அது வரலாற்றிலிருந்து பெறபட்டதாக இருக்கலாம். அல்லது ஆசிரியரின் சொந்த அனுபவத்திலிருந்தே அமைந்ததாகவும் இருக்கலாம்’’. மேலும். ‘‘கரு இப்படிதான் இருக்க வேண்டும் என்று யாராலும் வரையறுத்துக் கூற முடியாது. கருவிற்குள் கனலாய் இருக்கும் பிரச்சனைக்களுக்கானத் தீர்வினை வழங்குவதற்கு ஆசிரியருக்கு உரிமை உண்டு. சிக்கல்களையும் அவற்றிக்கான தீர்வுகளையும் கழையகுடன் சிந்திப்பதே படைப்பாசிரியரின் வேலையெனலாம்’’

**கதைப் பின்னல்**

கதைத்திட்டம், கதைகோப்பு அகிய பொருட்களில் கதைப்பின்னல் குறிப்பிடப் படுகிறது. கதைப்பின்னலை ஆங்கிலத்தில் (Plot) எனக் கூறுவர். நாவலின் பல்வேறு கதை நிகழ்ச்சிகளை காரணகாரிய முறையில் ஒன்றை அடுத்து ஒன்றை வைப்பது கதைப்பின்னலாகும். அந்த நிகழ்ச்சிக்குப்பின் இந்த நிகழ்ச்சி இன்ன காரணந்தால் வைக்கப் பட்டுள்ளது என்று முறைப்படுத்தும் மாறுகதைப் பின்னல் அமைய வேண்டும். ஒரு கதையானது படிக்கும் வாசகனுக்கு அடுத்து என்ன நிகழப்போகிறது என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைய வேண்டும். அப்பொழுதுதான் அடுத்த நிகழ்ச்சி என்னவாக இருக்கும் என சிந்தனையே உண்டாக்க முடியும். ‘‘கதைப்பின்னல் (Plot) என்பது கதையமைப்பு என்று சென்னை பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழகராதிக் கூறுகிறது’’ கதைப்பின்னல் கதையின் தன்மையைக் கொண்டும் பாத்திரங்கள் இயங்கும் நிலையை கொண்டும் அமைக்கப் படுகிறது.

**கதைப்பின்னல் அமைய வேண்டிய முறை**

கதைப்பின்னல் பலநிகழ்ச்சிகளின் கோர்வையாகும். இந்த நிகழ்ச்சிகள் முன்னுக்குப்பின் முரணாக அமையக்கூடாது. கதையின் பல பகுதிகளையும் இணைத்து அமைய வேண்டும். தொடர்பற்றதாக எந்த பகுதியும் இருத்தல் கூடாது. நிகழ்ச்சிகள் ஒன்றிலிருந்து ஒன்று உருவானதாக அமையும்படி ஆசிரியர் எழுதிச் சொல்ல வேண்டும். ‘‘புதினத்தின் கதைகருதி உடையதாக இருத்தலுடன் புத்துணர்ச்சி தரும் வகையிலும் உள்ளத்தைக் கருவம் வகையில் கலையழகு பொருந்தவும் கூறப் பெறுதல் வேண்டும்’’. மேலும் ‘‘நிகழ்ச்சிகளிடையே இடைவெளியோ பொருத்தமின்மையோ இருத்தல் கூடாது. நகைச்சுவை பகுதி அதிகமாகவோ அல்லது வருணனை அதிகமாகவோ இடம் பெறல் கூடாது. நிகழ்ச்சிகளை திடிரென்று வராமல் இயல்பாக அமைய வேண்டும். நற்பண்பு, உணர்ச்சி எண்ணம் ஆகியவற்றின் அடிப்படையில் கதைப்பின்னல் அமைய வேண்டும்.

**கதைப்பின்னலின் வகைகள்**

இக்கதைப்பின்னல் பல்வேறு அறிஞர்களால் பல்வேறாகப் பகுக்கப்பட்டுள்ளது. ‘‘டபிள்யூஎச் ஹட்சன் என்பவர் நெகிழ்ச்சிப் பின்னல் செறிவுப் பின்னல் என இரண்டாகப் பிரிப்பார். ஸ்டீபன் மெலைட் மினாட் என்பவர் மரபு வழிப்பின்னல் தலை விதியில்லா முடிவுப் பின்னல் என்று பகுப்பார்’’.

இவற்றுள் ஹட்சன் பகுப்பையோ பலரும் பின்பற்றி வருகின்றனர். கதையை யார் கூறினால் பொருத்தமாக அமையும் எனக் கருதி அவர்கள் கூற்றால் கூறுதல்? ஆசிரியர் தன்மை இடத்திலிருந்து தானே ஒரு பாத்திரமாக அமைந்து கூறல், ஆசிரியர் தனியே படர்க்கை நிலையில் நின்றுதான் பார்த்தது போலக் கதையைச் சொல்லுதல், பாத்திரங்களை கதையைச் சொல்லுதல், பாத்திரங்களே கதையைக் கூறிச் செல்வதாக அமைத்தல் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் மாறி மாறிக்கதையைச் சொல்லிக் கொண்டு செல்லுதல். உச்சகட்டத்தை நடுவில் அல்லது இறுதியில் வைத்தல் ஆகியன கதை சொல்வதற்கும் ஆசிரியர் பயன்படுத்தும் உத்திகளாகும். மேலும் படைப்பாளர்கள் கதையைக் கூறிச் சொல்லும்போது பல்வேறு உத்திகளை கையாளுதல் வழக்கம், கதையின் போக்கு தெளிவரவும் கதைமாந்தர் பண்பு விளக்க முறிவும், கதையைப் படிப்போர்க்குச் சுவை ஆர்வம் ஏற்படவும், ஆசிரியர் தன் திறனை வெளிப்படுத்தவும் உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. கதை கேட்கும் விருப்பம் மக்களுக்கு இயல்பாக இருப்பதால் சிறுகதை வாயிலாக தாம் உணர்ந்த விரும்பியவற்றை உணர்த்த முன்வந்தார். இதன் விரைவாக 1896-ஆம் ஆண்டில் பிரதாப முதலியார் சரித்திரம் உருவானது. அதில் சுவர் பலவகை மாந்தர்களைப் படைத்தார் பலவகை உணர்ச்சிகளை படைத்தார். பல நீதிகளை புகட்டினார். கிராமங்களிலும், நகரங்களிலும் தாம் பெற்ற அனுபவங்களைக் கொண்டு குடும்ப சமுதாய வாழ்க்கை நிலைகளை சொல்லவே வியமாகக் காட்டினார். கல்வி என்பது எல்லாத் தரப்பு மக்களுக்கும் போய்ச் சேராததால் கற்றல், எழுதுதல் என்பது முழுமையாக நிகழவில்லை. விடுகதைப் போராட்டம் பற்றிய சிறுகதைகள் மிகுதியாக எழுதப்பெறவில்லை. பொழுதுபோக்கிற்காக பல எழுதிக்குவித்தனர்.

இலக்கியங்களை நெறிப்படுத்தவும் செம்மையாகவும் அமைந்த விதிமுறைகள் இலக்கணம் என்றானது. அவ்வகையில் சிறுகதை அமையும் முறையை மு. வரதராசனர் தம் ‘இலக்கிய மரபு’ என்னும் நூலில் விளகுறிப்பிடுகிறார். ‟சிறுகதை நம் வாழ்க்கையை உள்ளவாறு எடுத்துக்காட்டுவதாய் அமைய வேண்டும் என்பதில்லை வாழ்க்கையோடு இயைந்ததாக அமைந்தாலே போதுமானது. மக்களின் வாழ்கைப் பகுதிகளையும் இடங்களையும் அமைத்தே எழுதல் நல்லது”

**1. தனுமை கதைக் கரு**

கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமல்ல. ஆண்களுக்கும் உண்டு என்பதையும், தவறுகள் செய்ய வாய்ப்புகள் இருந்தாலும், அதனையும் தவிர்த்து மீண்டு வருபவன்தான் மனிதன் என்பதையும் இக்கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

ஞானப்பன் என்பவன் அனாதை. அவன் விடுதியில் தங்கிக் கல்லூரி படிப்பைப் படித்தான். ஓய்வு நேரங்களில் கருணை இல்லத்தின் வாசலில் உள்ள மரங்களின் நிழல்களில் அமர்ந்துப் படிப்பான். கருணை இல்லத்திற்கு அருகில் ஒரு காலனி உள்ளது. அந்தக் காலனியில் தனு தன் பெற்றோருடன் வசித்து வந்தாள். அவளுக்கு ஒரு தம்பியும் இருந்தான். தனு பலகீனமான கால் உடையவள். தன் தம்பியோடு பள்ளிக்குச் சென்று வருவாள். ஞானப்பன் ஓய்வு நேரத்தில் படிக்க வரும்பொழுது தனுவைச் சந்தித்தான்.

தனுவைக் கண்டவுடன் அவளிடம் மனதைப் பறிக்கொடுத்தான். டெய்ஸி என்பவள் ஆசிரியை. அழகான தோற்றத்தை உடையவள். கருணை இல்லத்தில் ஒருமுறை ஞானப்பன் பாட்டு பாடினான். அப்பொழுது முதல் டெய்ஸியை தெரியும். டெய்ஸி ஞானப்பன் மீது ஆசைப்பட்டாள். தவறாக நடந்து கொண்டாள். அதையெல்லாம் தவிர்த்து ஞானப்பனுக்குத் தனுவின் முகம் மட்டும் மனதில் இருந்தது. தான் அனாதை என்பதைவிட ஞானப்பனுக்குத் தனு எதிர்ப்படாமல் இருக்கும் பொழுதுகளே அனாதையாகத் தோன்றியது.

**2. வேர் கதைக் கரு**

மருந்தினால் குணப்படுத்த முடியாததைக்கூட மனதினால் குணப்படுத்தி விடலாம். நம்பிக்கைதான்

வாழ்க்கை என்பதும் இக்கதை மூலம் வெளிப்படுகிறது.

**கதைச் சுருக்கம்**

முதலாளி வீட்டு அம்மாதான் ஆச்சி. அவர்கள் வீட்டிற்குக் கிராமத்திலிருந்து மாடு வாங்கி வந்திருந்தனர். அந்த மாடு யாருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக கன்றுக்குட்டியை ஈன்றது. இரவெல்லாம் குளிரில் கிடந்தக் கன்றுக்குட்டி எழுந்து நிற்காமல் அப்படியே கிடந்தது. இதனைக் கண்டவுடன் ஆச்சி மாட்டையும், கன்றுக்குட்டியையும் திட்டிக் கொண்டே இருந்தாள். ஆச்சி வீட்டிற்குத் தினமும் பூசணிப்பூவைக் கொடுப்பவள் பேச்சி. அப்படி பூவைக் கொடுக்க வரும்போது கன்றுக் குட்டியைப் பார்த்தாள். பார்த்தவுடன் கன்றுக்குட்டியைத் தூக்கி நிறுத்தினாள். நிறுத்திய பின்பு, நடக்கும் என ஆச்சியிடம் நம்பிக்கையாகக் கூறினாள். பின்பு, ஒருநாள் பேச்சியின் உடல்நிலை சரியில்லாமல் போனது. அவளுக்குப் பதிலாக அவளுடைய பெண் பிள்ளை பூக்களைக் கொண்டு வந்து கொடுத்தாள். அப்பொழுது அவளுடன் தங்கையையும் இடுப்பில் சுமந்து வந்தாள். அம்மா கன்றுக்குட்டியைப் பார்த்துவிட்டு வரச் சொன்னாள் என்று ஆச்சியிடம் கூறினாள். கூறிவிட்டு, தொழுவத்தை நோக்கிச் சென்றாள். இடுப்பிலிருந்த குழந்தையை ஆச்சி வீட்டின் திண்ணையில் இறக்கிவிட்டுச் சென்றாள். அந்தக் குழந்தை எழுந்து நடக்க முடியாமல் தரையோடு தரையாக தேய்த்து நகர்ந்தது. கால் இரண்டும் செயலிழந்து இருந்தது. அதனைக் கண்ட ஆச்சி மனம் கலங்கினாள்.

சடாரென்று அந்தக் குழந்தை ஆச்சிக்குக் கன்றுக்குட்டியாய்த் தெரிந்தது. மௌனமாகச் சீரணிக்க முயல்கிற பசுவின் கண்கள் நினைவிற்கு வந்தது. கன்றுக்குட்டி நிச்சயமாய் நடக்கும் என்பது பேச்சி குழந்தையில் வேர்விட்டு, கொடியாகப் படர்ந்து நின்றது.

**3. வேறு வேறு அணில்கள் கதைக் கரு**

பணத்தை வைத்து எதை வேண்டுமானாலும் வாங்கி விடலாம் என்ற பணக்காரர்களின் வாழ்க்கையையும், ஏழைகளின் வாழ்க்கை முறையையும் இக்கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

சிலம்பாயி என்பவள் வீட்டு வேலை செய்பவள். வறுமையின் காரணமாக வீட்டு வேலைக்குச் சென்றாள். இவளுக்கு இரண்டு மகள்கள். சீனியம்மாள் என்பவளைத் திருமணம் செய்து வைத்து விட்டாள். இன்னொரு கைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேலைக்குச் செல்வாள். சிலம்பாயி எல்லா வேலைகளையும் தூய்மையாகச் செய்வாள். பணப் பற்றாக்குறையினால் வேலை செய்யும் வீட்டில் சம்பளத்தை முன் பணமாக வாங்கிக் கொள்வாள். சிலம்பாயின் மூத்த மகள் சீனியம்மாள் திருமணமான சில மாதங்களிலேயே கணவனை விட்டு பிரிந்தாள். பின்னர், அவளுக்கும், சானிட்டரி இன்ஸ்பெக்டருக்கும் தொடர்பு இருந்ததாகக் கூறி போலீஸ் வரை பிரச்சனைப் போனது.

இந்தப் பிரச்சனையை அறிந்த வீட்டுக்காரர்கள் சிலம்பாயியை வேலையை விட்டு நிறுத்த முடிவு செய்தனர். அதற்கேற்றவாறு அவளும் முன்பணம் கேட்டாள். அதைக் காரணம் வைத்தே வேலையை விட்டு நிறுத்தினர்.

பின்னர், மூக்கம்மாள் என்ற வேலைக்காரியை சேர்த்தனர். அவள் அமைதியானவள். அமைதிக்கேற்ப வேலைத் தூய்மையாக இருக்காது. அவளுடைய மாப்பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. எனவே, மூக்கம்மாள் வேலைக்குச் செல்ல முடியவில்லை. அவளுக்குப் பதிலாக சிலம்பாயி சென்றாள். ஒரு வருடத்திற்குப் பின்பு, வேலையை விட்டு வந்த அந்த வீட்டிற்குத் திரும்பவும் சென்றாள்.

**4. வெளியேற்றம் கதைக் கரு**

அனைத்து உயிர்களுக்கும் மரமானது பயன்படுகிறது. காற்றில்லாமல் உலகில் வாழ முடியாது. எனவே, மரத்தை அழிப்பதினால் தனக்கும், மற்ற உயிர்களுக்கும் அழிவைத் தேடிக் கொள்கிறான் மனிதன் என்பதை இக்கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

பூவரச மரமானது ஒரு காம்பவுண்டில் அழகாகப் பூத்திருந்தது. காய்களும், பழங்களும் மிகுந்திருந்தன. அனைத்து வகையான பறவைகளும் தங்குவதற்கு இடமளித்திருந்தது அந்த மரம். மரத்தை சிறுவன் ஒருவன் வெட்டுவதற்குத் தொடங்கினான். வெட்டும்போது மரமானது எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. வெட்டும் திசையிலே கிளைகள் அப்படியே விழுந்துக் கிடந்தது.

மரத்திற்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு இந்த மரமானது ஊரின் நியாபகமாக இருந்தது. மரத்தில் வந்து அடையும் பறவைகள் இவள் நெஞ்சிலும் வந்து அடைந்தன. வெட்டும்பொழுது சிறுவனின் செயல்களைத் தடுக்க முடியவில்லை. வீட்டின் நடையிலே அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். மரம் முழுவதுமாக வெட்டி சாய்க்கப்பட்டது. இனி அந்தக் குடியிருப்பில் நிழலைக் கொடுப்பதற்கும், குளிர்ந்த காற்று வீசுவதற்கும் வாய்ப்பே இல்லை. இருந்த ஒரு மரமும் வெட்டப்பட்டது. பறவைகள் மரத்திலிருந்தும், இவள் மனதை விட்டும் வெளியேற்றம் செய்தன.

**5. அவனுடைய நதி அவளுடைய ஓடை கதைக் கரு**

வேறு வேறு இடத்திலிருந்து வந்தாலும், அன்பாகப் பழகி மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். பெண்களின் அடிமைத்தனத்திற்குப் பெண்களே காரணம் என்பதை இக்கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

வீட்டுச் சொந்தக்காரரான முதல் வீட்டு அம்மாவைத் தவிர, மற்றவர்கள் தவிர, வாடகைக்குக் குடிவருபவர்கள். அவரவர் வீட்டு ஆணினுடைய உத்யோக மாறுதலுக்கு ஏற்ப வீட்டினை மாற்றிக் கொள்வர்.

அவ்வகையில் ஐந்து குடியிருப்புகள் உள்ள இந்த வீட்டில் ஐந்து குடும்பங்கள் குடியேறினார்கள். ஈஸ்வரி மட்டும் தன் வேலையை செய்து விட்டு வீட்டிலே இருப்பாள். மற்றவர்கள் ஓய்வு நேரத்தில் ஒன்றாக அமர்ந்து பேசிச் சிரித்துக் கொள்வார்கள். அப்படி இருக்கும் பொழுது, அவர்கள் ஈஸ்வரியின் கணவன் வருவதைக் கண்டு மரியாதையாக எழுந்து நின்றனர். இதனைக் கண்ட ஈஸ்வரிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மறுநாளிலிருந்து தானும் அவர்களோடு பேசி மகிழ்ந்தாள். தன்கணவனுக்குக் கொடுக்கும் மரியாதையை அவனிடம் சொன்னாள். அவன், அதற்கு நான் அவர்களிடம் எழுந்திருக்க வேண்டாம் என்கிறேன் என்றான். அதற்கு அவள் வேண்டாம், அவர்கள் எழுந்திருக்கும் வரை எழுந்திருக்கட்டும் என்றாள். தானாகவே உட்கார தோணும்போது உட்காரட்டும் என்றாள். இப்படித்தான் எங்க அப்பாவுடன் வயலுக்குச் செல்லும்போது, வரப்புல கால் வச்ச உடனே அம்பது,அறுபது கொக்குகள் பறந்து போகும். அப்பா வெளியிலிருந்து வரும்போது அம்மா, அத்தை, ஆச்சி எல்லோரும் எழுந்து நிப்பாங்க என்ற நினைவோடு ஈஸ்வரி சொல்லிக் கொண்டிருந்தாள்.

**6. கனிவு கதைக் கரு**

வயது முதிர்ந்த பிறகுதான் துணைத் தேவை, உறவுகள் அவசியம் என்பதை இக்கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

பெரிய ஆயான் கம்பின் துணையோடு நடந்து சென்றார். வயது முதிர்ந்தவராயினும், கண் பார்வை நன்றாகவே இருந்தது. விளாம்பழ மரத்தைப் பாதுகாப்பதே இவரது வேலையாகும். இவர் ஒரு காலத்தில் கம்பீரமாகவும், துணிச்சலாகவும் இருந்தவர். இவருக்குப் பொன்னம்மாச்சி என்ற மனைவியும், ஒரு மகன், மூன்று மகள்கள் இருந்தனர். இவருடைய நண்பன் மாத்திக்காணி. அவனும் யானை மிதித்துக் கூழாகிப் போனான். ஆச்சி போன பிறகு வெந்நீர் வைத்துக் கொடுக்கக்கூட ஆளில்லாமல் போனது. இவருடைய மகன் சேராத ஆள்கூடச் சேர்ந்து கெட்டுப்போய், இன்னொருத்தியைக் கட்டிக் கொண்டு வடக்குத் தெருவில் வசிக்கிறான். மூன்று பெண்களின் வாழ்க்கையும் சரியில்லாமல் போய்விட்டது.

துணையின்றி இருக்கும் பெரிய ஆயானை மருமகள் வந்து கவனித்துக் கொண்டாள். கணவனிடம்அடியை வாங்கிக் கொண்டு, இங்கு வந்து கஞ்சிவைத்துக் கொடுப்பாள். அவளும் இப்பொழுது வருவதில்லை. பின்பு ஒரு நாள் மருமகள், ஆம்பூர் தர்மசங்கரய்யர் பேத்தியின் மகளுடன் வந்தாள். பெரியஆயான் இருவரையும் வரவழைத்தான். அந்தச் சிறுமியின் பெயர் ஷோபனா. அவளிடம் சகஜமாகப் பழகினார். தான் 1930ஆம் ஆண்டு ஜுலை 13ஆம் நாள் பிறந்தேன் என்று தொடங்கி, அவருடைய மனைவி, மகன், மகள்கள் பற்றியும் சொன்னார். ஹேட்லியின் மனைவியுடன் சல்லாபித்தது முதல் கூறினார். பெரிய ஆயானின் முகம் பிரகாசமாக இருந்தது. இப்படி ஒரு பெண் தன்னலமற்று இங்குக் காத்துக் கிடக்க வருந்துவதற்கு ஒன்றுமில்லை என்று மருமகளைக் கூப்பிட்டு அணைத்துக் கொண்டார்.

**7. வாழையடிகள் கதைக் கரு**

வறுமையில் வாழ்பவர்களின் வாழ்க்கையில் வெறும் நினைவுகள் மட்டுமே உள்ளது என்பதை இக்கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

ஊரிலிருந்து மேட்டு வீட்டுக்குச் சித்திரை வடிவு வேலைக்கு வந்திருந்தாள். அந்த வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்குக் கடைக்கு வந்தாள். அப்பொழுது அவள் வயதை ஒத்த பிள்ளைகள் எல்லாம் விளையாடிக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்ததும் அவளுக்கு ஊரின் நியாபகம் வந்தது. அம்மாவுடன் உடங்காட்டுக்குச் சுள்ளி வெட்ட போனது நினைவிற்கு வந்தது. அப்பொழுது சாராயம் காய்ச்சிக் கொண்டிருந்த தவசிப் பாண்டியனுக்கு ஒத்தாசையா இருந்ததாகக் கூறி போலீஸ்காரர்கள் கேஸ் போட்டுவிட்டனர். இந்தச் செய்தியைக் கேட்டவுடன், சித்திரை வடிவின் அப்பா கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டார். இப்படி நினைத்து நின்றுக் கொண்டிருக்கும் பொழுது ஒரு தாத்தா வந்து பேசினார். அவர் அவ்வூரில் இஸ்திரிப் போட்டுக் கொடுக்கும் வேலையைச் செய்து வந்தார். அவர் பாண்டியம்மாவின் தாத்தா. பாண்டியம்மா தட்டானைப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவளை அம்மா கூப்பிட்டாள். கூப்பிட்டு தேய்த்து வைத்திருந்த துணிகளை எல்லாம் அவரவர் வீட்டில் கொடுக்கும்படி சொன்னாள். சித்திரை வடிவுடன் பேசிக் கொண்டிருந்த தாத்தா வந்தார். வந்து அவர் இஸ்திரி போட்டார். சித்திரை வடிவும் கடைக்குச் சென்று திரும்பி வந்தாள். துணிகளை எடுத்துச் சென்ற பாண்டியம்மா, திரும்பி வரும்பொழுது வாழைப்பூ மடலை எடுத்து வந்தாள். இருவரும் அதனை முகர்ந்து பார்த்தனர். முகர்ந்தவுடன் சித்திரைவடிவு அழுதாள். வாழைப்பூ வாசம் அவள் அப்பா இறந்து கிடந்த வாழைத் தோப்பை நினைவூட்டியது. அப்பா எனச் சித்திரைவடிவு அழுதாள்.

**8. பாசஞ்சர் ரயிலும் ஆண்கள் பெட்டியும்**

**கதைக் கரு**

எந்தவொரு நிகழ்வும் குடும்பத்தினரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும், இல்லையென்றால் வாழ்க்கையே வெற்றிடமாகிவிடும் என்பதை இக்கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

சுந்தரத்தின் அப்பா காரை பெயர்ந்த வீட்டிலேயே உள்ளார். விசாலமாக எடுத்துக் கட்டப்பட்ட வீட்டில் அம்மா இருந்தாள். சுந்தரத்தையும் லீவு கிடைத்தால் வா என்று கடிதம் எழுதி அனுப்புவார். அவருடைய செயல்கள் மனைவியைத் துன்பப்படுத்தின. மகள் கல்யாணத்திலேயும் நாற்காலியில் அட்டணக்கால் போட்டு உட்கார்ந்துகிட்டு பேப்பர் படிக்க எங்க அத்தானாலதான் முடியும் என்று பிச்சம்மாச் சின்னம்மை சொல்வாள். அவள் கொண்டு வந்த பனங்கிழங்கும், அவளைப் போல மணம் பரப்பியது. பனங்கிழங்கின் குருத்துக்கள் இருந்து தேவபிச்சை நினைவுக்கு வந்தது. தினமும் ரயிலிலே பழகின தேவா டீச்சர், சுந்தரத்தின் அப்பாவோடு நெருங்கிய உறவுடையவர் போன்று இருந்தார். அவரைப் பற்றி எல்லாம் மனைவியிடம் கூறியதே இல்லை.

அவ்வாறு இருக்கையில் தேவா டீச்சர் தன் குடும்பத்தோடு யாத்திரை செல்கிறார். எதிர்பாராதவிதமாக அவர் சென்ற கார்

விபத்துக்குள்ளாகிறது. அவர் இறந்து விடுகிறார். இதை ஸ்டேஷனில் அறிந்தவுடன் யாரிடமும் பேச மனம் வரவில்லை. அந்தத் தகவலை யாரிடமும் சொல்லாமல் மனதிலே வைத்து வேதனைப்படுகிறார்.

அப்பாவின் வேதனையை அறிந்து கொண்ட மகள் வருத்தமுற்று ஏங்கி அழுகிறாள். ஊரிலிருந்து வந்து அம்மா அம்மா என்று கதவைத் தட்டுகிறாள். சுந்தரமும் வந்து வெளியில் நின்றான். அப்பா வந்து கதவைத் திறக்கிறா. திறந்துவுடன் பிச்சம்மாச் சின்னம்மை செத்துப் போயிட்டா தெரியுமா? என்றார். அப்போது அப்பாவின் குரல் பாசஞ்சர் ரயில் போனது போல அதிர்ந்தது.

**9. காக்கைச் சிறகுகள்**

**கதைக் கரு**

அன்பு என்பது உருவத்தைப் பார்க்கும் பொழுது வருவதில்லை. பழகியதை நினைத்துப் பார்க்கும் பொழுதுதான் அன்பானது அதிகமாகிறது என்பதை இக்கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

சிவகாமி என்பவள் தன் குடும்பத்தினரோடு ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தாள். அவள் மிகவும் சுறுசுறுப்பானவள். அனைத்து வேலைகளையும் செய்வாள். பாசத்திற்கு இவளிடம் அளவே இல்லை. பக்கத்து வீட்டு சிறுவனுக்கு இவளை மிகவும் பிடிக்கும். எந்நேரமும் இவள் கூடவே இருப்பான்.

அப்படி இருக்கையில் திடீரென்று சிவகாமி குடும்பத்தினர் வீட்டைக் காலி செய்து விட்டு வேறு வீட்டிற்குச் சென்று விடுகின்றனர். சிறுவன் எப்பொழுதும் சிவகாமி அக்கா நினைப்பிலேயே இருக்கிறான். அதனால் அவன் அம்மாவிடம் திட்டு வாங்குகிறான்.

சிவகாமி குடும்பத்தினர் இருந்த வீட்டிற்கு வேறு ஒரு குடும்பத்தினர் வாடகைக்கு வருகின்றனர். அவர்களைக் கண்டாலே இந்தச் சிறுவனுக்குப் பிடிக்கவிலலை. எதைப் பார்த்தாலும் இவனுக்கு சிவகாமி அக்காதான் நினைவுக்கு வருகிறாள். புதிதாக வந்த குடும்பத்தினர் வீட்டில் கீதா என்ற சிறுமி இருந்தாள். அவள் இந்தப் பையனின் அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தாள். பேசிக் கொண்டிருக்கும் பொழுது, இந்த அண்ணனைப் பார்த்தாள் இரவி அண்ணன் போல இருக்கிறது என்றாள். அதாவது, கீதா குடும்பத்தினர் முன்பிருந்த வீட்டின் எதிர்புறம் இருந்த வீட்டின் பையன். அந்த அண்ணன் போலவே இருக்கிறது என்றாள் கீதா. சிறுவன் சிரித்துக் கொண்டே நின்றான்.

**10. அப்பாவைக் கொன்றவன் கதைக் கரு**

பம்பரமாக சுற்றும் இந்த உலகில் யார் நல்லவர், கெட்டவர் என்பதை அறிந்து கொள்ள முடியாது இருக்கிறது என்பதை இக்கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

சித்திரை அப்பா இல்லாமல், அம்மாவின் அரவணைப்பில் வளர்ந்தாள். பெரியப்பாவின் உதவியுடன் பள்ளியில் படித்தாள். வகுப்பறையில் நன்றாக படிப்பாள். ஆனால் தேர்வு என்றாலே பதட்டத்தோடு காணப்படுவாள். வறுமையில் இருந்தாலும் நன்றாக படிக்கும் மாணவி என்பதால் சித்திரைப்பூ ஆசிரியைக்கு இவளை மிகவும் பிடிக்கும். சித்திரைக்கு ஆதரவாக அந்த ஆசிரியை இருந்தாள்.

அரையாண்டுத் தேர்வு வந்தது. அதற்குப் பயந்து சாப்பிடமல்கூட பள்ளிக்குப் புறப்பட்டாள். அன்று பார்த்து பேருந்து வரவே இல்லை. இதனால் சித்திரை மேலும் பதட்டமாக இருந்தாள். அப்பொழுது ஒருவர் நீண்ட மீசையும், கையில் குடையுடனும் வந்து இவள் அருகில் நின்றார். பிறகு, இவளிடம் பேச ஆரம்பித்தார். சித்திரையும் பேசினாள். காரணம் அவள் அப்பாவின் பெயரைக் கூறி அவர் மகள்தானே என்று கேட்டு பேசியதால் இவளும் பேசினாள். சித்திரைக்கு அப்பாவின் பெயரைக் கேட்டதால் மகிழ்ச்சியாக இருந்தது. அந்த வழியில் பேருந்து வரத் தொடங்கியது.

பெரியவர் பேருந்தில் ஏறிச் சென்றார். அவர் போன பிறகு எதிர்புறம் இருந்த பெட்டிக்கடைக்காரர் வந்தார். வந்து சித்திரையிடம் அவர் யார் என்று உனக்குத் தெரியுமா என்றார். தெரியாது என்று கூறினாள். அவன்தான் உங்க அப்பாவைக் கொன்ற சிவனுப்பாண்டி என்றார். சித்திரையின் கண்கள்

கண்ணீரால் பெருகியது. அப்பா என்று அழத் தொடங்கினாள் சித்திரை. வண்ணதாசனின் 'முத்துக்கள் பத்து' சிறுகதைகள் சமுதாய சிந்தனைகளோடு படைக்கப்பட்டிருக்கிறது. இச்சிறுகதைகளில் குடும்பத்தில் நடக்கும் நிகழ்வுகளும், ஆதரவற்றோரின் வாழ்க்கை முறையும், ஏழைகளின் நிலையும், மரங்களின் பயனும், சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகளும் வெளிப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனின் செயல்பாடுகளும் குடும்பத்தைச் சார்ந்தே காணப்படுகிறது. குடும்பங்கள் ஒன்று சேர்ந்தால் சமுதாயம் எனப்படுகிறது. இலக்கியங்களும், சிறுகதைகளும் மக்கள் மனதில் ஆழப் பதியும்படி வலியுறுத்தப்பட்டுள்ளன.

**சமுதாயச்சிந்தனை**

சமூகம் என்பது மனிதனை மையமாக வைத்து இயங்கி வருகின்றது. "சமுதாயத்தில் ஒருவன் உயர்வதும் தாழ்வதும் அவனவன் சூழ்நிலை, வாழ்க்கை வசதி, பிற நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைகின்றன"[1] எனப் பரமசிவானந்தம் கூறுவார். "சமூகம் மக்களால் இயன்றது. ஒருவன் மற்றொருவனை உணர்தலே சமூகம்"[2] என்னும் தொடரையே சமூகம் என்பதற்கு விளக்கமாகக் கொள்ளலாம். அவ்வாறே இவ்வியலில் சமூகம் பற்றிய செய்திகள், குடும்பங்களும் அதில் ஏற்படுகின்ற சிக்கல்கள், சமூக வாழ்வில் ஏற்படும் சிக்கல் மற்றும் அதன் தீர்வுகள், கல்வி, பொருளாதாரக் குறைபாடுகள், அதனால் வரும் பாதிப்புகள் முதலியன பற்றி இவ்வியல் ஆராய்கிறது.

**சமூகம் பற்றிய செய்திகள்**

மனிதன் குடும்ப உறவோடு நின்று விடுவதில்லை. சமூகத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறான். மனிதன் ஒரு சமுதாயப் பிராணி என்று அறிஞர்கள் கூறுவர். மனிதன் இயல்பாகவே தன்னைப் போன்ற மனிதர்களோடு கூடி வாழவே விரும்புகின்றான்.3 ஆகவே, மனிதன் கூடி வாழ்வதே மனித சமுதாயத்திற்குச் சிறப்பான ஒன்றாகும். "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"[3] என்ற பழமொழி இதனை உணர்த்தும். "சமுதாயம் எப்படி இருந்தாலும் அதன் தாக்குதலைக் கடந்து தனி மனிதன் தன் நல்வாழ்வுக்கு வேண்டிய வழியை வகுத்துக் கொண்டு அமைதியாக வாழ முடியும் என்பார் அறிஞர் பாஸ்கல் கஸபர்ட்"[4] மேலும், "மனிதன் தன் இனத்துடன் இணைந்தும் பிணைந்தும் வாழும் இயல்புடையவன், அவன் கூடிக் கலந்து வாழ்வதில் சமூகம் உருவாகிறது"[5] என்பார் கோமதி சங்கர்.

"தனி மனித வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்கும் இடையில் நிரம்ப வேறுபாடு உண்டு. ஒருவன் தனியாகச் சிந்திப்பதற்கும் வேறுபாடு இருப்பதைக் காணலாம். உரிமை, பொறுப்பு ஆகியவை தனிமனித நிலையில் இருப்பது போன்று ஏற்படுகின்றது." எனவே இவ்வாறு ஏற்படுகின்ற சமூகம் படைப்புகளுடன் ஒப்பிடுவதற்கு ஏதுவாகிறது.

**குடும்பங்களும் அதில் ஏற்படும் சிக்கல்களும்**

சமூகத்தில் இயல்பாக நடைபெறும் இயக்கத்தில் சிறுகதைகளில் உள்ள குடும்ப உறுப்பினர்களும் பொருந்துகின்றனர். பிரச்சனை என்பது குடும்ப உறுப்பினர் யாரேனும் அவரவர் நெறியிலிருந்து மாறும்போது ஏற்படுகின்றது. "குடும்ப வாழ்வில் கணவன் - மனைவி மற்றும் பிள்ளைகள் ஊரில் உள்ள சொந்த உறவினர்களிடையே யாரேனும் ஒருவரால் சில சமயம் சிக்கல்கள் ஏற்படுகின்றன."

**மன உறுதி**

'தனுமை' என்ற சிறுகதையில் ஞானப்பன் விடுதியில் தங்கிக் கல்லூரி படிப்பைப் பயின்றான். அப்பொழுது தனுவைச் சந்தித்தான். பார்த்தவுடனே அவளிடம் மனதைப் பறிகொடுத்தான். அனாதையாக இருந்தவன் அவளைக் கண்டவுடன் பெரு மகிழ்ச்சியில் ஆழ்ந்துப் போனான். இவனிடம் தவறாக நடந்துக் கொள்ளும் டெய்ஸியை பெண் என்ற நிலையிலே கொள்ள முடியாது.

தனு இல்லாத நேரங்களே இவனுக்கு அனாதையாகத் தெரிந்தது. தவறுகள் செய்ய வாய்ப்பு

இருந்தாலும், தன் மனதில் தனுவைத் தவிர வேறு யாரையும் நினைக்காத ஞானப்பன் உயர்ந்தவனாகக் காணப்படுகிறான்.

சமுதாயத்தில் தற்போது நிறைய தவறுகள் நடக்கின்றன. அவை அனைத்தும் மனிதனால் விளைவது. காரணம் மனமே ஆகும். மனதை அடக்கி வாழ வேண்டும்.

**நம்பிக்கையின் உன்னத நிலை**

'வேர்' என்னும் சிறுகதையில் பேச்சி என்பவள் பூசணி பூக்காரி. இவள் எல்லா வீடுகளுக்கும் பூக்களைக் கொண்டு வந்து கொடுப்பாள். அப்படி வரும்போது ஆச்சி வீட்டு மாட்டைப் பார்க்கிறாள். கன்றுக்குட்டி போட்டது முதல் எழுந்திருக்க வில்லை. கன்றுக்குட்டியைத் தூக்கி நிறுத்தி, நடக்கும் என்று நம்பிக்கையாய்க் கூறினாள். மறுநாள் அவள் வரவில்லை. அவளுடைய மகள் தன் தங்கையை இடுப்பில் சுமந்து, பூப்பெட்டியைத் தலையில் வைத்துக் கொண்டு வந்தாள். பூக்களைக் கொடுத்தப் பின்பு கன்றுக்குட்டியைப் பார்த்துவிட்டு வரச்சொன்னாள் அம்மா என்றாள். இடுப்பிலிருந்த குழந்தையை இறக்கி விட்டுச் சென்றாள். அக்குழந்தையின் கால்கள் எழுந்திருக்க முடியவில்லை. இழுத்து இழுத்துச் சென்றது. உயிருள்ள சோகமாக அக்குழந்தை ஆச்சிக்குத் தெரிந்தது. அப்போதுதான் பசுவின் மனநிலையைப் பேச்சி வழியாக ஆச்சி அறிந்தாள். கன்றுக்குட்டி நடக்கும் என்பது ஆச்சிக்குப் பேச்சியின் குழந்தை மூலமாகத் தெரிந்தது. ஐந்தறிவு படைத்த உயிர்களுக்கும் அன்பு என்பது உண்டு என்பதை இக்கதை சமுதாயப் பார்வைக்குக் கொண்டு செல்கிறது.

**முதலாளித்தும்**

'வேறு வேறு அணில்கள்' என்ற சிறுகதையில் சிலம்பாயி என்பவள் வேலைக்காரி. குடும்ப வறுமையின் காரணமாக வேலை செய்யும் வீட்டில் முன்பணம் வாங்குவாள். தன்னுடன் கைக் குழந்தையையும் தூக்கி வருவாள். சுத்தமாக வேலை செய்வாள். தாவரங்களின் மீது மிகுந்த பற்று வைத்திருந்தாள். அவளுடைய மூத்த மகள் சீனியம்மாள். இவளுக்குத் திருமணமாகி ஏழு, எட்டு மாதங்களிலேயே பிடிக்காமல் திரும்பி வந்துவிட்டாள். சீனியம்மாவிற்கும் சானிட்டரி இன்ஸ்பெக்டருக்கும் தொடர்பு இருந்ததாகக் கூறி பிரச்சனை வந்தது. இப்பிரச்சனைப் போலீஸ் ஸ்டேஷன் வரை போனது. சிலம்பாயி வேலைப் பார்க்கும் வீட்டில் வழக்கம் போல் பணம் கேட்டாள். அந்த வீட்டு அம்மா போலீஸ் வரை போன பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு, சிலம்பாயிடம் வம்பு வளர்த்தாள். அதையே காரணம் காட்டி வேலையை விட்டு நிறுத்தினாள். அந்த வரிசையில் உள்ள வீடுகளிலும் அதையே செய்தனர். சிலம்பாயி போன பிறகு மூக்கம்மாள் என்ற வேலைக்காரியைச் சேர்த்தனர். மூக்கம்மா அமைதியானவள். அமைதிக்கேற்ப வேலை சுத்தமாக இருக்காது. அவளுடைய மாப்பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லாததால் அவள் வேலைக்கு வரமுடியவில்லை. அவளுக்குப் பதிலாக நான் வந்தேன் என்று சிலம்பாயி வந்தாள். ஒரு வருடத்திற்கு முன் சென்றவள் இப்பொழுது வந்திருப்பது வியப்பாக இருந்தது. சமுதாயத்தில் பணம் என்பது மேல்நிலை மக்களுக்கு மட்டுமே உரியதாக உள்ளது. வறுமையில் வாடுபவர்கள் அடிமையாகத்தான் இருக்கின்றனர் என்பதை இக்கதையின் மூலம் உணர முடிகிறது.

**வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்**

'வெளியேற்றம்' என்ற சிறுகதையில் ஒரு பையன் மரத்தை முதலில் உலுக்குகிறான். பின்பு கிளைகளை வெட்டுகிறான். அந்த மரம் காம்பவுண்டில் குடியிருந்த அவளின் ஊரை நினைவூட்டும் விதமாக அமைந்திருந்தது. அவன் வெட்டும் பொழுது அவளால் தடுக்க முடியவில்லை. வெட்டுவதற்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் மரம் அப்படியே விழுந்துக் கிடந்தது. காம்பவுண்டில் இருந்த ஒரு மரமும் வெட்டப்பட்டது. இனி பச்சை மரங்களே அந்தப் பகுதியில் கிடையாது. அந்த மரத்தில் வந்து அடையும் பறவைகள் எல்லாம் அவள் மனதிலும் அடைந்தன. பறவைகள் வந்து அடையவே இடமில்லை. அப்படியே எல்லாம் வெளியேற்றம் செய்தன. அறிவியல் முன்னேற்றம் என்று சொல்லிக்

கொண்டு நிறைய நவீனப் பொருட்களைத் தயாரித்துள்ளோம். அவைகளால் வெளியிடப்படும் புகையானது சுற்றுச் சூழலைப் பாதிக்கிறது. மரங்களின் மூலம் காற்று தூய்மையாக இருக்கிறது. மரங்கள் குருவிகளுக்குத் தங்கும் இடத்தை அளிக்கிறது. இப்படிபலநன்மைகளைச் செய்யும் மரங்களை நாம் அழிக்கிறோம். அதன் மூலம் பறவைகள் பாதிக்கப்படுகின்றன. நமக்கும் தீமையை நாமே வரவழைத்துக் கொள்கிறோம்.

**சமுதாயத்தில் ஆண்கள் பெறுமிடம்**

'அவனுடைய நதி அவளுடைய ஓடை' என்னும் சிறுகதையில் ஐந்து குடும்பளைப் பற்றிக் கூறியுள்ளார். வீட்டுக்காரர்களின் உத்யோக மாறுதல்களுக்கு ஏற்ப வீடு மாறி வருகின்றனர். அப்படி வந்தவள்தான் ஈஸ்வரி. ஈஸ்வரி வீட்டு வேலைகளையும், குழந்தைகளையும் பார்த்துக் கொள்வாள். அங்குள்ள மற்ற வீட்டுப் பெண்கள் ஒன்றாகக் கூடி அரட்டை அடிப்பர். அது ஈஸ்வரிக்குப் பிடிக்காது. அப்படி பேசிக் கொண்டிருக்கும் பொழுது, ஈஸ்வரியின் கணவன் வருகிறான். அவனைக் கண்டவுடன் பேச்சை நிறுத்திவிட்டு அனைவரும் எழுந்து நின்றனர். இதனைக் கண்ட ஈஸ்வரி அவர்களிடம் பேசி மகிழ்ந்தாள். கணவருக்கு மரியாதைக் கொடுப்பதைக் கூறி அவனிடம் கிண்டலாகப் பேசினாள். அதற்கு அவன் நான் வேண்டுமானால் மரியாதைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லுகிறேன் என்றான். வேண்டாம் என்று ஈஸ்வரி கூறினாள். சமுதாயத்தில் பெண்கள் சுந்திரமாகத்தான் இருக்கிறார்கள். இருப்பினும் பெண்கள் ஆண்களுக்கு மரியாதை கொடுக்கின்றனர் என்பதை இக்கதை மூலம் உணர முடிகிறது.

**சாதியின் தாழ்வும், மருமகளின் உயர்வும்**

'கனிவு' என்ற சிறுகதையில் வயது முதிர்ந்த பெரிய ஆயான் பற்றிக் கூறப்படுகிறது. பெரிய ஆயான் பொன்னம்மாச்சியை மணந்து கொண்டு வாழ்ந்தான். அவருக்கு ஒரு மகனும், மூன்று மகள்களும் இருந்தனர். கம்பீரமாக வாழ்ந்து வந்தவர். மனைவி இறந்த பின்பு தனிமைப்படுத்தப்பட்டார். விளாமரத்தையே கவனித்து வந்தார். மூன்று மகள்களின் வாழ்க்கையும் சரியில்லாமல் போனது. ஒரு மகனும் கெட்டுப்போய் தானாகவே திருமணம் செய்து கொண்டான். வயது முதிர்ந்த காலத்தில் பெரிய ஆயானைக் கவனிக்க ஆள் இல்லை. வேறு இனத்தைச் சேர்ந்த மருமகள்தான் பெரிய ஆயானைக் கவனித்துக் கொண்டாள்.

இருக்கும் நாட்களில் சாதி, வீண் பிடிவாதம் என்று இருந்துவிட்டு இறுதிக் காலத்தில் கனிவாயப் பேசி பயனில்லை. உடம்பில் பலம் இருக்கும் போது யாரையும் கண்டுகொள்ளவில்லை. வயது முதிர்ந்த பின் உறவைத் தேடி பயனில்லை. சாதி என்பது மனிதனை ஒற்றுமையாக்காது. அன்பு மட்டும்தான் நிரந்தரம் என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

**சமுதாயத்தில் குழந்தைத் தொழிலாளர்கள்**

'வாழையடிகள்' என்ற சிறுகதையில் சித்திரைவடிவு பெற்றோரின் ஆதரவு இல்லாமல் ஊரிலிருந்து வேறு ஊருக்கு வேலைக்கு வருகிறாள். அப்படி அந்த வீட்டிற்கு வந்தவள் பொருட்களை வாங்கக் கடைக்குச் சென்றாள். தன் வயது குழந்தைகள் எல்லாம் விளையாடிக் கொண்டிருந்தனர். அவளைப் போலவே பாண்டியம்மாவும் அம்மாவிற்கு உதவிகளைச் செய்து கொடுத்தாள். இதையெல்லாம் பார்க்கும் பொழுது சித்திரைவடிவுக்கு ஊரின் நியாபகம் வந்தது.

சமூகத்தில் ஆதரவற்றக் குழந்தையாயினும், ஆதரவுள்ள குழந்தையாயினும் வறுமையில் வாடும்பொழுது வேலைக்குச் செல்கின்றனர். சிறுவயதில் அனுபவிக்கும் மகிழ்ச்சிகளை இழக்கின்றனர். பெற்றோர் செய்யும் வேலைகளையே வாழையடி வாழையாக அவர்கள் செய்துவருகின்றனர்.

**மனம் ஒரு கல்லறை**

'பாசஞ்சர் ரயிலும் ஆண்கள் பெட்டியும்' என்ற சிறுகதை, வெளியில் சொல்லாமல் மனதிலேயே வைத்திருக்கும் ரகசியங்களால் ஏற்படும் விளைவுகளைக் கூறுகிறது. இவர் தனக்கு எவ்வளவு வசதிகள் இருந்தாலும் பழைய அறையிலேயே இருந்தார். மனைவியிடம் வெறுப்பாகப் பேசினார். மகனும்,

மகளும் அப்பாவை நினைத்து வருந்தினர். தேவபிச்சை இவருடைய தோழியாக இருந்தாள்.

இருவரும் பழகியது வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாது. தேவபிச்சை திருமணம் முடிந்து பின்பு ஒரு நாள் குடும்பத்துடன் யாத்திரை சென்றாள். விபத்தில் இறந்து போனாள். இந்தச் செய்தியை அறிந்தவர் தகவலை யாரிடமும் சொல்லவில்லை. தன் மனதிலேயே வைத்து அழுதுக் கொண்டிருக்கிறார். இச்செய்தியை அறிந்த பிள்ளைகள் அப்பாவைப் பார்க்க வருகின்றனர். சின்னம்மை இறந்துவிட்ட செய்திக்கேட்டு வருத்தமுறுகின்றனர்.

தன் மனதிலே உள்ள சோகங்களைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்படி இல்லையெனில் நாமும் துன்பப்பட்டு, நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் துன்பப்பட வைக்கும் என்பதை ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

**அன்பின் நினைவுகள்**

‘காக்கைச் சிறகுகள்’ என்ற இச்சிறுகதையில் சிறுவன் ஒருவன் தன் வீட்டில் குடியிருந்துவிட்டு சென்ற அக்காவை நினைத்து வருந்துகிறான். சிவகாமி அக்காவை நினைத்து அந்தச் சிறுவன் வருத்தமுறுகிறான். அந்த வீட்டைப் பார்க்கும்போதெல்லாம் அவள் நினைவிற்கு வந்தாள். அந்த வீட்டிற்கு வேறு ஒரு குடும்பத்தினர் வாடகைக்கு வந்தனர். அந்த வீட்டில் கீதா என்ற சிறுமியும் இருந்தாள். அவளுக்கு இவனைப் பார்த்தால் இரவி அண்ணன் போல இருந்தது. இதற்கு முன் அவர்கள் குடியிருந்த வீட்டின் அருகில் இருந்தவர். அந்த அண்ணனைப் பற்றிய சிந்தனையே சிறுமியின் மனதில் ஓடிக் கொண்டிருந்தது. சமுதாயத்தில் பெரியவர்கள் பணத்தைத்தான் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சிறுவர்களோ எந்த எதிர்பார்ப்பும் இன்றி அன்பைத்தான் பார்க்கிறார்கள். அன்பு என்பது எந்நிலையிலும் மாறாதது.

“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புண்கண்ணீர் பூசல் தரும்” (குறள்: 71)

என்று வள்ளுவர் அன்பிற்கு இலக்கணம் கூறுவது இக்கதையில் பொருத்தமானதாக அமைகிறது.

**தந்தையை இழந்தவளின் நிலை**

‘அப்பாவைக் கொன்றவன்’ என்னும் சிறுகதையில் சித்திரை என்பவளின் மனநிலைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சித்திரை நன்றாகப் படிப்பாள். ஆனால் தேர்வு என்றாலே அவளுக்குப் பதட்டமாக இருக்கும். அப்படி அவள் தேர்விற்குப் போகும்போது பேருந்து வரவில்லை. பேருந்திற்காக காத்திருந்தாள். அவளுடைய அம்மா உடல்நிலை சரியில்லாததோடு வேலைக்குச் சென்று இவளைப் படிக்க வைத்தாள். சின்னப்பூ டீச்சரும் சித்திரைக்கு ஆதரவாக இருந்தாள். சித்திரை பேருந்திற்குக் காத்திருக்கும்போது, அவளிடம் ஒருவர் வந்து பேசிக் கொண்டிருந்தார். வெகுநேரத்திற்குப் பின் பேருந்து வந்தது. கையில் குடையுடன் வந்த அந்த நபர் ஓடிப்போய் அந்தப் பேருந்தில் ஏறினார். அவர் போன பிறகு எதிர்புறம் இருந்த பெட்டிக்கடைக்காரர் அவனை யார் என்று கேட்டார். அதற்கு அவள் தெரியாது என்றாள். அவன்தான் உன் அப்பாவைக் கொன்றவன் என்றான். சித்திரை அழுதுகொண்டே நின்றாள். பேருந்திலிருந்து கையும், குடையும் இவளைப் பார்த்து அசைந்தது. குழந்தைகளுக்கு அன்பானது தாயின் மூலம் கிடைக்கிறது. அறிவானது ஆசிரியரிடம் இருந்து கிடைக்கிறது. இக்கதையில் அவள் வீரமற்று தேர்வைக் கண்டு அச்சப்படுவதற்குக் காரணம் தந்தை இல்லாமல் இருப்பதுதான். தந்தையின் மூலம்தான் வீரம் வளர்க்கப்படுகிறது. ஆகவே சமுதாயத்தில் மாதா, பிதா, குரு மூவரும் அவசியம் என்பதை இக்கதை உணர்த்துகிறது. சமுதாயச் சிந்தனையின் மூலம் இக்கதையில் சமூகம் பற்றிய செய்திகள், குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள், ஆதரவற்றோரின் நிலை, வறுமையின் நிலை, சமுதாயத்தில் பெண்கள் நிலை, அனைவருக்கும் கல்வி முறை, பொருளாதாரக் குறைபாடு ஆகியன கூறப்பட்டுள்ளன. சக மனிதர்களின் மீதான அன்பு, அன்றாட வாழ்வு தரும் நெருக்கடியை மீறி மனிதன் இன்பமாக இருக்கும் பொழுதுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## முடிவுரை

"வண்ணதாசன் சிறுகதைகளில் சமுதாயப் பார்வை" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து பெறப்பட்ட கருத்துக்கள் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மேலைநாட்டு இலக்கிய வகைகளுள் ஒன்றான சிறுகதைகளில் மையக் கருவாக ஒரு சம்பவமோ அல்லது அறிவுரையோ அமையும். சிறுகதை வரலாற்றில் வண்ணதாசன் முக்கிய இடம் வகிக்கிறார். இவருடைய கதைகள் சமுதாய பிரச்சனைகளையும், மனிதனின் மன இயல்புகளையும் மையக் கருவாகக் கொண்டு விளங்குகிறது. தனி மனிதனின் ஒழுக்கமுறை, அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும் முறை, மனிதர்களின் மனநிலை, பொறுப்புணர்வு, உலகில் நிலையாமை ஆகிய சிந்தனைகள் இவரது கதைகளில் காணக் கிடைக்கின்றன. அதுபோல, பல்வேறு பண்பு நலன்கள் கொண்ட பாத்திரங்கள் இவரது சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளன. அன்பினால் ஏற்படும் மனவுறுதி, பாசத்தினால் உண்டாகும் மனமாற்றம், வறுமையில் வாழும் மனிதர்கள், மரத்தினால் ஏற்படும் நன்மைகள், குடும்பத்தில் உள்ள உறவுகள், குழந்தைத் தொழிலாளர்கள், அன்பின் நினைவுகள் போன்ற கருத்துக்கள் இச்சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளமையை அறிய முடிகிறது. இவ்வாறு சமுதாய நிகழ்வுகள், பிரச்சனைகள் போன்றவற்றை நுட்பமாகக் கண்டுணர்ந்து தன் சிறுகதைத் தொகுப்பில்மையப் பொருளாகக்கொண்டு சமுதாய விழிப்புணர்வை ஆசிரியர் உணர்த்தியுள்ளார். சமூகம் நன்மை பெறுவதற்குப் படைப்பாளன் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதை இச்சிறுகதைத் தொகுப்பில் சுட்டப்பட்டுள்ளன. சிறுகதை என்ற இலக்கியம் சமுதாயத்திற்குப் பொழுதுபோக்காக மட்டுமின்றி பயன்தரும் இலக்கியமாகவும் இருக்க முடியும் என்பதை இச்சிறுகதைகள் குறிப்பிட்டுள்ளன. ஆசிரியர் ஒவ்வொரு சிறுகதையிலும் இன்றைய சமூகத்திற்கு அவசியமான கல்வி, பொருளாதாரம், தனி மனித வாழ்க்கை முறைகள், இல்வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள், அதற்கான தீர்வு முறைகள் போன்றவைகளைத் தகுந்த முறையில் பாத்திரப்படைப்புகளின் வழியாக வெளிப்படுத்தியுள்ளதை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது. ஒவ்வொரு கதையும் வாழ்க்கையில் ஓர் உண்மையை எடுத்துரைப்பதாக அமைகிறது.

## துணைநூற்பட்டியல்


1.வண்ணதாசன் முத்துக்கள் பத்து,அம்ருதா பதிப்பகம்,நெ. 5, 5ஆவது தெரு, எஸ்.எஸ். அவின்யூ, சக்தி நகர், போரூர், சென்னை - 116.

துணைமைச் சான்றுகள்

1.ஞானமூர்த்தி. தா.ர இலக்கியத் திறனாய்வியல்,ஏ.பி. 1108, 3ஆவது தெரு,தென்றல் குடியிருப்பு, யாழ் வெளியீடு,மேற்கு அண்ணா நகர்,சென்னை - 40.

2.சின்னசாமி. தே.வி அவ்வையாரின் நீதி நூல்கள்,நாச்சியார் பதிப்பகம்,டி.வி.எஸ். அபார்ட்மெண்ட்ஸ்,9/6, கங்கை அம்மன் கோயில் தெரு, சென்னை - 24.

3.சுபாஷ் சந்திரபோஸ். ச தமிழ் இலக்கிய வரலாறு, பாவை பப்ளிகேஷன்ஸ்,124, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை,முதற்பதிப்பு, 2001.

4.சுப்ரமணியன். ச.வேசிலப்பதிகார மூலம்,மணிவாசகர் பதிப்பகம்,31, சிங்கர் தெரு, பாரிமுனை,சென்னை - 108.

5.தண்டாயுதம். இராதமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை - 5.

6.பாலசுப்ரமணியன். சு தமிழ் இலக்கிய வரலாறு, பாரி நிலையம்,184, பிரகாசம் சாலை,சென்னை - 108. 24ஆம் பதிப்பு - 1996.

7.மெய்யப்பன். ச பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம்,சிதம்பரம் - 608 001,நான்காம் பதிப்பு, மார்ச் - 2003.

8.வரதராசன். மு இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1976.

9.ஸ்ரீசந்திரன். ஜெ தமிழ் இலக்கிய வரலாறு, வர்த்தமான பதிப்பகம், ஏ.ஆர்.ஆர். வளாகம்,141, உஸ்மான் சாலை, தியாகரா நகர், சென்னை,முதற்பதிப்பு, 1999.